ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1640/8 - 2010 පෙබරවාරි 08 වැනි සඳුදා - 2010.02.08
*1640/8 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் தெகிவளை - கல்கிசை மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சி அங்கத்துவம் இல்லாதொழிந்தமை காரணமாக தெகிவளை-கல்கிசை மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வரது பதவி வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

பிரதி மாநகர முதல்வரான திரு. அச்சி மத்துமகே தொன் ஹசல தனசிரி அமரதுங்க என்பவர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் சட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் பிரதி மாநகர முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியை சேர்ந்தவரான தெகிவளை - கல்கிசை மாநகர சபையில் உறுப்பினர் ஒருவரைத் தீர்மானிக்குமாறு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ(1) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஆளொருவராக திரு. ருவன் கித்சிரி லியனகுணவர்தன என்பவரை நியமித்து தனது சொந்தத் தீர்மானத்தை தெரிவித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது தெகிவளை-கல்கிசை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஏ. சேனாநாயக்க ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. ருவன் கித்சிரி லியனகுணவர்தன என்பவர், தெகிவளை-கல்கிசை மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. சேனாநாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
தெகிவளை-கல்கிசை மாநகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு,
*2010, பெப்புருவரி 5.*

*2 - 532*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.